**தலைப்பு – 156 இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 215 | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் |
| - | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் |
| - | இளைஞர் நலன்புரி நிதியம் |
| - | தேசிய இளைஞர் வெற்றி அதிகாரசபை |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்கள் மீதான 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம்/நிறுவகம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 156 | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 2015 ஒக்தோபர் 30 |
| 215 | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 2015 ஒக்தோபர் 23 |
| - | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் | 2015 ஒக்தோபர் 30 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 10,081.92 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 9,042.58 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களத்தினது தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 996.83 மில்லியனிற்கும் ரூபா 42.50 மில்லியனிற்கும் இடைப்பட்ட அளவில்

அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 11.6 சதவீத்திற்கும் 2.8 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **தலைப்பு** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 156 | 8,538.43 | 7,541.59 | 996.83 | 11.6 |
| 215 | 1,543.49 | 1, 550.99 | 42.50 | 2.8 |
| மொத்தம் | **10,081.92** | **9,042.58** | **1.039.33** | **10.3** |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| **விடய இலக்கம்** | **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|---|
| | **உச்ச எல்லை** | **உள்ளபடி யானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடி யானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடி யானவை** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 15601 | 22.00 | 21.68 | 15.00 | 20.20 | 100.00 | 59.51 |
| 21501 | 50.00 | 32.58 | 45.00 | 55.42 | 220.00 | 122.09 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 3.67 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் பின்வருமாறு

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 7002/0000/00/0334/0014/000 | 1.03 |
| தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 7002/0000/00/0274/0014/000 | 2.64 |
| | | 3.67 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 61.94 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **அமைச்சு / திணைக்களம்** | **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0066/000 | 38.48 |
| தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 6000/0000/00/0015/0096/000 | 23.46 |
| மொத்தம் | | 61.94 |

## 3. தலைப்பு 156 – இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள திறன்கள் துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட அலுவலகம் மற்றும் தேசிய இளைஞர் படையணியினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பராமரிக்கப்படாதிருந்ததாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | காசோலைகள் தபால் இடும் மற்றும் கையளித்தல் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு | நிதிப்பிரமாணம் 388 மற்றும் 389 |
| (iii) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

## 3.2 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 815,418,000 தொகையான மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 8,475,000 ஆன நிதி ஏற்பாட்டிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ரூபா 7,295,000 ஆக இருந்ததுடன், அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 78 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) 08 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ரூபா 11,344,699 ஆல் மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய ரூபா 939,286 கூட்டுத்தொகையான 06 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்

15601 ஆம் இலக்க அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வரும் ரூபா 1,273,104 கூட்டுத்தொகையான நிலுவை மீதிகளை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் சேவை முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 363,795 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதாளிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

உலக இளைஞர் மாநாட்டிற்காக ஹம்பாந்தோட்டை பொது நலவாய மாநாட்டு அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு அமைச்சினால் ரூபா 2,087,950 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ் அலுவலகம் 2015 செப்தம்பர் 14 ஆந் திகதி வரையிலும் இளைஞர் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது.

#### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சினால் 19 மோட்டார் வாகனங்கள் முறையற்ற வகையில் கீழே காட்டப்பட்டுள்ள வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

| சொத்து வகை | சொத்து அலகுகளின் எண்ணிக்கை | சொத்து வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 01 | தபால் சேவைகள் அமைச்சு |
| | 07 | கல்விச் சேவைகள் அமைச்சு |
| | 02 | தொழிற்பயிற்சி அதிகாரசபை |
| | 05 | தேசிய இளைஞர் படையணி |
| | 01 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் |
| | 01 | சிரேஷ்ட அமைச்சரவை அலுவலகம் |
| | 02 | கடல்சார் பல்கலைக்கழகம் |

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சினால் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்துக்களின் வகை | சொத்துக்கள் சொந்தமாகவுள்ள நிறுவனம் | அளவு | பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| | | | ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 2 | 2 |
| | தபால் சேவைகள் அமைச்சு | 1 | 4 |

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

தேசிய இளைஞர் படையணியால் ஏனைய தரப்பினர்களிற்குச் சொந்தமான காணிகளில் 39 நிலையங்கள் நடாத்திச் செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றைப் பராமரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 39,465,432 கூட்டுத்தொகையான செலவிடப்பட்டிருந்தது.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்குக் குறைந்த காலப்பகுதிக்குரிய பொறுப்புக்கள் ரூபா 17,036,882 ஆக இருந்தது.

## 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணி அதிகாரச்சட்டத்தின் 2(4) ஆம் பிரிவு | இளைஞர் படையணியின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக தேவையான தொழிற் பயிற்சி, இளைஞர் அபிவிருத்தி மற்றும் தாபித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டு அதற்காக அதிகாரமளித்தல் இளைஞர் படையணியால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தக் குழுக்கள் இளைஞர் படையணியானல் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 1646 | 2014 ஆம் ஆண்டிற்குரிய இளைஞர் படையணிக்குரிய 10 வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகளையும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளையும் கணக்காய்வாளர் தலைமை |

அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 1647(உ) | இளைஞர் படையணியினால் மோட்டார் வாகனங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104(3) | இளைஞர் படையணிக்குரிய 2 வாகனங்களுக்கு மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிர்வாகச சுற்றறிக்கை

------------------------------------

| | |
|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | அமைச்சு மற்றும் இளைஞர் படையணிக்குரிய வாகனங்கள் தொடர்பில் 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் பயன்பாடு தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |

(ஈ) மதியுரையாளர்களை சேர்ப்பதற்கான அரச வழிகாட்டல் கோவை

-------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 2.3.1 (சீ) வழிகாட்டல் | துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட அலுவலகத்தை நவீன மயப்படுத்துவதற்கான மதியுரை சேவையின் தேவைப்பாடு தொடர்பான உள்ளடக்கிய விபர அறிக்கை (EOI) தயாரித்து அதற்காக கொள்வனவுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 3.5 வழிகாட்டல் | நிர்மாண வேலைகளின் கிரயம் ரூபா 2 மில்லியனை விடவோ அல்லது அதற்கு மேற்பட்ட நிர்மாணங்களுக்காக பகிரங்க செய்திப் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் மதியுரையாளர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டி |

இருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (iii) | 3.3 வழிகாட்டல் | மதியுரைச் சேவையின் தேவைப்பாட்டை தெளிவுபடுத்தப்படும் வகையில் தேவையான தகவல்கள் Terms of Reference (TOR) தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் மதியுரைக் கட்டணங்கள் தொடர்பாக முன்னரே தீர்மானித்து இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. |
| (iv) | 3.2 மற்றும் 4.4 வழிகாட்டல்கள் | மதியுரை சேவைகளைப் பெற்றுக்கொள்கின்ற நிறுவகத்திற்கு சாதகமான முறையில் போட்டி முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. செலவாகின்ற கிரயம் தொடர்பான விரிவான தகவல்களை உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 6.6.4 வழிகாட்டல் | வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீதமான அளவு செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அந்த எல்லையை மிகைத்து ஒப்பந்த பெறுமதீல் 26 சதவீதத்திற்கு சமமான ரூபா 177,580 தொகை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் மதியுரையாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக பிணைப் பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 3.7 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் அதன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 125,891 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அமைச்சு மற்றும் தொழில் பயிற்சிதுறை தொடர்பாக 09 நிறுவனங்களினால் ரூபா 9,592 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது.

அந் நிகழ்ச்சித்திட்டத்தலிருந்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திறன்கள் அபிவிருத்தி அலகின் செலவினம் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் கண்டறியப்பட்டன.

**(அ) குளியாப்பிட்டி பல்கலைக்கழக நிறுவகம் தொடர்பாக வெளிக்கள கணக்காய்வு பரிசோதனை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கட்டிட நிர்மாணத்தற்கு உத்தேசிக்கப்பட்ட காணி 2015 யூன் 23 ஆந் திகதி வரையிலும் அமைச்சிற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உரிய நிர்மாண ஒப்பந்தம் மற்றும் மதியுரை சேவைகளை நிறைவேற்றும் செயற்பாட்டிற்காக ரூபா 112,306,096 கூட்டுத்தொகையான உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதிக்கு அரச பொறியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தில் 04 பிரதான குறைபாடுகள் காணப்பட்டன.

(iii) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறுவகம் அறிமுகப்படுத்திய 09 பாடநெறிகளில் 05 பாடநெறிகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத 2 பாடநெறிகளுக்கு இரண்டு விரிவுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். ஆரம்பிக்கப்பட்ட 2 பாடநெறிகளைப் பின்பற்றுவதற்காக சமூகமளித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 14 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2 பாடநெறிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட இரண்டு விரிவுரையாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமும், 05 பாடநெறிகளுக்கு ஆய்வுகூடங்களை நிர்மாணத்தமைக்கான கிரயமுமாக மொத்தம் ரூபா 98,648,137 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த பயிற்சி உபகரணங்களும் 2015 யூலை மாதம் வரையிலும் விளைவற்று காணப்பட்டன.

(iv) ஒரு பாடநெறிக்கு 2015 சனவரி 18 ஆந் திகதி வழங்கப்பட்ட 51 உபகரண உருப்படிகளின் பெறுமதி ரூபா 1,349,227 ஆன 31 உபகரண உருப்படிகள் பொருளிப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டில் 04 ஆய்வுகூடங்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்களுக்காக தேவையான ஆய்வுகூட அமைப்பு, நீர் மற்றும் மின்சாரம் என்பன முறையாக வழங்கப்படாமல் இருந்தமையால் அவ்வுபகரணங்கள் விளைவற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அதில் ஒரு பாடநெறிக்காக மாத்திரம் வழங்கிய பொருட்களின் பெறுமதி ரூபா 2,070,000 ஆக இருந்தது.

**(ஆ) பயிற்சி நிலையங்களுக்கான உபகரணங்கள் கொள்வனவு**

வெளிநாட்டு உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குரிய நவீன மயப்படுத்தப்பட்ட 02 பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 40 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 14 நிறுவனங்களிடமிருந்து மொத்தம் ரூபா 34,545,147 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக கட்டளையிடப்பட்டிருந்தது. அவ்வாறு கட்டளையிடப்பட்ட பொருட்கள் 2014 திசெம்பர் 20 ஆந் திகதி அளவில் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அப்பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு இணங்க வழங்கப்பட்டிருந்ததாக சான்றிதழொன்று இல்லாமல் களஞ்சிய பொறுப்பாளரால் வழங்கப்பட்ட போலியான பெறுவனக் குறிப்பினை (GRN) அடிப்படையாகக் கொண்டு ரூபா 21,029,057 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டு துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்பிரிவினால் பொருள் பெறுவனவு தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று இல்லாமல் 2015 சனவரி 21 ஆந் திகதி ரூபா 30,945,799 தொகை மன்றத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

**(இ) மாத்தறை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான நிறுவகம் நிர்மாணம்**

துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 117,078,871 தொகை செலவு செய்து அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மதியுரை சேவையின் கீழ் தனியார் நிறுவனமொன்றினால் மாத்தறை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான நிறுவகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் 2014 திசெம்பர் 30 ஆந் திகதி இந் நிர்மாணம் பூர்த்தி செய்து அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 திசெம்பர் 29 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் இவ் ஒப்பந்தத்தின் குறைப்பாட்டுப் பட்டியலொன்று செயற்திட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2015 மே 12 ஆந் திகதி வரையிலும் அக் குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடத்தை திட்டமிடும் போது ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான உபகரணங்களை பொருத்துதல் இயலுமை மற்றும் அதற்கு தேவையான இடவசதிகள் காணப்படுகின்றதா என்பது தொடர்பாக கவனம் செலுத்தி பாடநெறிக்கு தேவையான ஆய்வுகூட திட்டத்தின் பிரகாரம் அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆய்வுகூடத்திற்கு தேவையான உபகரணங்கள் வைப்பதற்கு இராக்கை, நீர் மற்றும் மின் சுற்று என்பன அமைக்கப்படாமை காரணமாக கணக்காய்வு திகதி வரையிலும் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பொருத்தப்பட்டு பயிற்சி பாடநெறிகளை நடாத்த முடியாமல் இருந்தது.

(iii) 730 நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பல்கலைக்கழக நிறுவகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் 475 புத்தகங்கள் கிடைக்கப்பெற்றதாக செயற்திட்ட அலுவலகத்தினால் அறிக்கையிட்டிருந்தது.

(iv) எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கும் தொடர்ச்சியாக பாடநெறிகளை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்கு இடவசதிகள் வழங்கக்கூடிய வகையில் கட்டிடங்கள் திட்டமிடப்படாத காரணத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைகள், ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு மாத்திரம் போதுமாக இருந்ததுடன் எதிர்வரும் ஆண்டிற்கு புதிதாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு சிக்கலாக இருந்தது.

**(ஈ) உற்பத்தி தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு**

---

மேற்குறித்த பாடநெறிக்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 186,138,494 ஆன பொருட்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தும் கடிதத்தின் 60 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சமமான தன்மையிலான உபகரணங்கள் ஒரு தொகுதியாக வகைப்படுத்தப்பட்டு சர்வதேச போட்டி கூறுவிலை கோரல் முறைமை மூலம்

கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு சர்வதேச போட்டி கூறுவிலை கோரல் முறைமை அடிப்படையிலான கொள்வனவு மாத்திரம் அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதற்கு முரணாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற பெயரில் பொருள் தொகுதியாக்கப்பட்டு தேசிய போட்டி கூறுவிலை கோரல் மூலம் அமைச்சினால் இக்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் போது பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்தது.

(i) கூறுவிலை கோரப்பட்ட 97 அலகுகளில் 35 இற்கு கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 05 நிறுவனங்கள் ஒரு பொருள் தொகுதிக்காக மாத்திரம் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.3.1 வழிகாட்டியின் பிரகாரம் இக்கொள்வனவிற்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கேள்வி ஆவணங்களில் கேள்வி மதிப்பீட்டு நிபந்தனையொன்றாக உபகரணங்கள் தொகுதியாக்கப்பட்டு பகுதியொன்றுக்கு மாத்திரம் கூறுவிலை விலை சமர்ப்பிக்க முடியாதென குறிப்பிடாதிருந்த போதிலும், பகுதியொன்றுக்கு கூறுவிலை சமர்ப்பித்த வழங்குனர் நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர் 97 தொகுதியாக்கப்பட்ட பொருட்களில் 62 இற்கு மாத்திரம் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iv) கூறுவிலை சமர்ப்பித்த ரூபா 186,138,494 பெறுமதியான பொருட்களுக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கும் கூறுவிலை கோரப்படாத பொருட்களுக்காக மீண்டும் கூறுவிலை கோருவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்வனவுக் குழு பரிந்துரைக்கப்பட்டிந்த போதிலும் கூறுவிலை சமர்ப்பிக்காத பொருட்களுக்காக கணக்காய்வு திகதியான 2015 யூலை 10 ஆம் திகதி வரையிலும் மீண்டும் கூறுவிலை கோரப்பட்டிருக்கவில்லை.

(v) 2015 சனவரி 06 அந் திகதி வரையிலும் பொருட்களை வழங்கி பொருத்துவதற்காகவும் பரிசோதனை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அக்காலப்பகுதியும் 2015 சனவரி 11 அந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. அத்திகதி வரையிலும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை செயற்படுத்துதல்

### (ஆ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்

ரூபா 169,000,000 தொகையான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்திலான மாத்தறை நில்வளா இளைஞர் பூங்காவின் நிர்மாண நடவடிக்கை 2011 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்த வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 7,657,349 செலவிடப்பட்டிருந்ததுடன், அச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.9 செயலாற்றல்

மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சினாலும் சிறு முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவினாலும் அமுல்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் இருந்து அபிவிருத்திக்கு பின்னைய நியாயப்பத்திரம் இளைஞர் பிரதான தலைப்பாகக் கொண்டு 2014 மே மாதத்தில் நடாத்தப்பட்ட சர்வதேச இளைஞர் செயலமர்விற்கு மொத்தம் ரூபா 647,197,048 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஆரம்ப திட்டம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட 20 பேருடன் கூடிய சர்வதேச செயலாற்றல் படையணியால் சர்வதேச இளைஞர் செயலமர்வில் வெளியிடப்பட்ட இளைஞர் தொடர்பான கொழும்பு கூற்றில் மேற்கூறியதன் பிரகாரம் இளைஞர்களை பிரதானமாக தலைப்பாக மாற்றுவதற்குரிய 10 அடிப்படை நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுத்த வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அமைச்சின் இளைஞர் அபிவிருத்தி பிரிவினதோ அல்லது அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்த நிறுவனங்கிளன் செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போதும் மேற்கூரிய பரிந்துரை உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று அமைச்சிடம் காணப்படவில்லை.

(ஆ) சிறு முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட 2014 இன் முயற்சியாண்மை கண்காட்சி மற்றும் பரிசு வழங்கல் விழாவினை நடாத்துவதற்கு மீளாய்வாண்டில் முடியாதிருந்தது. மெலம் மீளாய்வாண்டின் போது 23,540 நபர்கள் பங்குபெறச் செய்யப்பட்டு 755 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், ஆண்டினுள் 45,606 நபர்கள் பங்குபெறச் செய்யப்பட்டு 1,141 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் ஆட்களைப் பங்குபெறச் செய்வதன் செயன் முன்னேற்றம் முறையே 151 மற்றும் 226 சதவீதமாக இருந்த. அதற்கு ஒப்பாக நிதிச் செயன்முன்னேற்றம் 26 சதவீதமாக இருந்தது. அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துவதன் செயன்முன்னேற்றம் 100 சதவீதத்தை விஞ்சியிருந்ததுடன், 2 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் 100 சதவீதத்திற்கு குறைந்த பங்குபற்றலைக் கொண்டிருந்தது. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போதும் செயலாற்றல் இலக்கினை தீர்மானிக்கும் போதும் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளங்கள் தொடர்பாக சரியான மதிப்பீடொன்று செய்யப்படாமை மேற்குறித்த நிலைமைக்கு காரணமாக இருந்தது.

### 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) துறைசார் திறன் அபிவிருத்தி செயற்திட்ட அலுவலகத்தை நவீனமயப்படுத்துவதற்கும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் மீளாய்வாண்டின் போது ரூபா 24,592,115 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்நடவடிக்கைக்குரிய சமமான உருப்படி ஒன்றாக எடுக்கப்பட்டு வகைப்படுத்தப்படாமலும் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.3 வழிகாட்டலின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இல்லாமல் மட்டுப்படுத்தப்பட்ட விலைகோரல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மட்டுப்படுத்தப்பட்ட விலைகோரல் மேற்கொள்வதற்கு 09 நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்ட முறை தொடர்பான விபரங்கள் கோவையினுள்

காணப்படாதிருந்ததுடன், விலைகோரல் பதிவுத்தபால் மூலம் பெற்றுக் கொண்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

(iii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.1.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் தொழில்நுட்ப மாதிரி திட்டம் உட்பட கூறுவிலை கோரும் ஆவணம் (Bid document) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் சகல துறைசார் செலவினங்கள் உட்பட மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சமமான உருப்படி ஒன்றுக்கு விசேட நிபுணத்துவம் உள்ள நிறுவனங்களுக்கிடையே போட்டி விலைகோரலாக கொள்வனவு மேற்கொள்ளப்படாததன் காரணமாக முழு உருப்படிக்காக இரண்டு நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கிடைத்திருந்தன.

(vi) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 (அ) வழிகாட்டியின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகளின் அளவொன்றோ மாதிரியொன்றோ விலை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(vii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.3.11(அ) வழிகாட்டியின் பிரகாரம் சகல விலை மனுதாரர்களினாலும் குறித்துரைக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் கேள்வி பாதுகாப்பு பிணையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(viii) 2014 மார்ச் 11 மற்றும் 12 ஆந் திகதிகளில் இதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஒரு நடவடிக்கைக்காக மாதிரிகளை சமர்ப்பிக்காமை மற்றும் மேலும் 02 கொள்வனவுச் செயற்பாடுகளுக்கான கூடிய விலை என்ற அடிப்படையில் அக்கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2014 மார்ச் 31 ஆந் திகதி மேற்குறித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்குப் பதிலாக வேறு தொழில்நுட்ப குழுவொன்று காரணம் குறிப்பிடப்படாமல் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அத்தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் முன் அங்கீகாரமின்றி 3 நிறுவனங்களிடமிருந்து கிடைத்த ரூபா 5,738,264 தொகை கொள்வனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவை பின்பற்றப்படாமல் செயற்திட்ட அலுவலகத்திற்கு தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 4,326,791 பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) அமைச்சின் முதலாம் மாடியில் இருந்த சிற்றுண்டிச்சாலையை நவீனமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் போது ரூபா 22,788,402 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.1.1(அ) மற்றும் 4.3.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் முறையே தொழில்நுட்ப மாதிரி மற்றும் திட்டம் உள்ளடக்கப்பட்ட கூறுவிலை கோரல் பதிவேடு மற்றும் மொத்த கிரய மதிப்பீடொன்றும் அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அக் கொள்வனவிற்கு கட்டிட நிர்மாணம் மற்றும் தளபாடங்களை வழங்குதல் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக வெவ்வேறாக கூறுவிலை கோரப்படாததால் முழுச் செயற்பாட்டிற்கும் ஒரு நிறுவனத்தினால் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iii) துறை தொடர்பாக நிபுணத்துவத்துடன் கூடிய 2 நிறுவனங்கள் காற்றுசீசீராக்கி இயந்திரங்களை வழங்குவதற்கு மாத்திரம் விலை விபரங்களை வழங்கியிருந்ததுடன், அவ்விலை ரூபா 1.8 மில்லியன் அளவிலான குறைந்த பெறுமதியொன்றாகும். தொழில்நுடபக் மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்வனவு குழு என்பன இவ்விலை விபரங்களின் வேறுபாடு தொடர்பாக மதிப்பீடு செய்யாமல் மேற்குறித்த வழங்குனருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.3.18(அ) வழிகாட்டலின் பிரகாரம் பெறுமதி சேர் வரி வெவ்வேறாக குறிப்பிடுவதற்கு கேள்விதாரருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் பின்னர் பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழும்பும் வரியாக ரூபா 3,584,406 எனக் குறிப்பிடப்பட்டு அனுப்பிய கடிதத்தை நிறுவனம் ஏற்றுக் கொண்டிருந்தது.

(இ) 16 தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்களின் கட்டிடங்களுக்கு பூச்சு பூசுவதற்காக ரூபா 8,543,848 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்படுகின்றன.

(i) வர்ணப்பூச்சு பூசுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சதுர அடி அளவினை குறிப்பாக இனங்கண்டு மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) விலை விபரங்களை மதிப்பிடுவதற்கு அடிப்படையொன்று இல்லாமல் இருந்ததுடன், குறைந்த விலை அடிப்படையில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தோடு ஒவ்வொரு ஒப்பந்தக்காரர்களும் ஒரே செயற்பாட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலை விபரங்களில் ஒரு சதுரஅடிக்கு ரூபா 7 முதல் ரூபா 24 வரையான வீச்சிலான விலை விபரங்கள் மதிப்பீட்டின் போது விலகலுக்கான காரணங்களை குறிப்பிட்டிருக்கவில்லை.

(iii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9.1 வழிகாட்டலின் பிரகாரம் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் அமைச்சினால் கேள்விதாரருக்கு உடனடியாக கடிதமொன்றைச் சமர்ப்பித்து அத்துடன் ஒப்பந்தத்திற்காக முறையான உடன்படிக்கையொன்று எழுதி கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், 04 சந்தர்ப்பங்களின் போது 1 மாதம் முதல் 2 மாதங்கள் வரைகாலம் தாமதிக்கப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(iv) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9.3 வழிகாட்டலின் பிரகாரம் அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த ஒப்பந்த உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய 05 ஆரம்ப விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 முகாமைத்துவ நலிவுகள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது அமைச்சிற்குரிய வாகனங்கள் விபத்திற்குட்பட்டமையால் ரூபா 372,630 கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்ட

சேதங்கள் ஏற்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறித்த 5 விபத்துக்களில் 3 இல் அரசிற்கு ஏற்பட்ட ரூபா 259,580 ஆன நட்டம் தொடர்பாக குறித்த காப்புறுதி நிறுவனத்திடமிருந்தோ அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்தோ அறவிடப்பட்டதாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 (1)(அ),(2) மற்றும் (3) இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 1647 இன் பிரகாரம் விபத்துக்கள் தொடர்பாக விபத்து இடம்பெற்றவுடன் பொலிசிற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் ஏப்ரல் 12 ஆந் திகதி வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக 14 நாட்கள் தாமதித்து பொலிசிற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும் அந்த விபத்து தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம் திருத்தங்களிற்கு செலவழித்த தொகைக்கு சமமான தொகையொன்று காப்புறுதி இழப்பீடாக கிடைக்கப் பெற்றமையால் இவ்விபத்தினால் அரசிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கவில்லையென தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விபத்து தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்தங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவரின் சான்றிதழொன்றினால் உறுதிப்படுத்தாமல் அமைச்சினால் 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 456,918 கூட்டுத்தொகையான வாகனத் திருத்தங்களுக்கான பட்டியல் தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) அமைச்சினால் மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவு திட்டத்தை தயாரிக்கும் போது எதிர்வரும் ஆண்டிற்காக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய உருப்படிகள் தொடர்பாகவும் கொள்வனவு எல்லை தொடர்பாகவும் கவனம் செலுத்தி காலப்பகுப்பாவொன்று உட்படுத்தி விரிவான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பின்வரும் குறைபாடுகள் காரணமாக மீளாய்வாண்டின் கொள்வனவு நடவடிக்கைகள்

செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ளப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

தெரிவுக் கணக்காய்வின் பிரிகாம் அமைச்சின் பல பிரிவுகளுக்காக 3 சந்தர்ப்பங்களின் போது ரூபா 323,676 பெறுமதியான 2 கணனிகளும் ஸ்கேனர் இயந்திரமொன்றும் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 592,935 கூட்டுப்பெறுமதியான 05 காற்றுச்சீராக்கி இயந்திரங்களும் 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 305,899 பெறுமதியான அலுவலக உபகரணங்களும் சந்தை ஒப்பீட்டு முறை பின்பற்றப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் பல சந்தர்ப்பங்களில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த தேசிய போட்டி கூறுவிலை கோரப்பட்டு கிரயத்தை குறைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய வேன் வண்டியொன்று 2014 திசெம்பர் 17 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 26 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 104 (1) ,(2) மற்றும் (3) இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் இவ் விபத்து ஏற்பட்டிருந்ததாக மாத்திரம் கோவைகளில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், வேறு எந்தவொரு தகவலொன்றும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இவ்விபத்திற்குரிய மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 194,533 ஆக இருந்ததுடன், அத்தொகை 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அளவிலும் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து மீள்நிரப்புவதற்கோ பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிடப்பட்டோ இருக்கவில்லை.

## 3.12 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

**(i) இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடமான பதவியணியினர் |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 52 | 34 | 18 |
| (ii) | மூன்றாம் நிலை | 181 | 134 | 47 |
| (iii) | இரண்டாம் நிலை | 906 | 663 | 243 |
| (iv) | ஆரம்ப நிலை | 77 | 68 | 9 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக / ஒப்பந்த அடிப்படை) | 6 | 1 | 5 |
| | மொத்தம் | 1,222 | 900 | 322 |

**(ii) தேசிய இளைஞர் படையணி**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 3 | 3 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 5 | 5 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 256 | 230 | 26 |
| (iv) | ஆரம்ப நிலை | 55 | 53 | 2 |
| (v) | ஒப்பந்தம் | 357 | 300 | 57 |
| | மொத்தம் | 676 | 591 | 85 |

தேசிய இளைஞர் படையணியின் பயிற்சி நிலையத்திற்கு உரிய பதவியணியினர் 10 கல்விசார் உத்தியோகத்தர்களையும் 4 கல்விசாரா உத்தியோகத்தர்களையும் கொண்டிருக்க வேண்டிய போதிலும், பயிற்சி நிலையங்களில் 74 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவ் வெற்றிடங்களில் 17 நிலையங்களில் நிலையப் பொறுப்பாளர் பதவிகளும் 13 நிலையங்களில் உதவி நிலையப் பொறுப்பாளர் பதவிகளும் வெற்றிடங்ககளாக காணப்பட்டன.

**(iii) சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு**

சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் அமைச்சின் விடயப் பரப்பெல்லையின் கீழ் காணப்படுகின்ற ஒதுக்கப்பட்ட பிரிவாக இருந்ததுடன் அதன் சகல பதவியணியினர் தரங்களையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று காணப்படவில்லை. மூன்றாம் நிலையில் தரமிடப்பட்ட வேலைக்காக அமைச்சின் பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளவாறான பதவியணியினர் பின்வருமாறு இருந்தது.

| | | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை |
|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 36 |
| (ii) | மூன்றாம் நிலை | 101 |
| (iii) | இரண்டாம் நிலை | 38 |
| (iv) | ஆரம்ப நிலை | 6 |
| | மொத்தம் | 181 |

(iv) எம்பிலிபிட்டி தலைமைத்துவ பயிற்சி அபிவிருத்தி தேசிய நிலையம்

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1 | 1 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 5 | 3 | 2 |
| (iii) | இரண்டாம் நிலை | 27 | 25 | 2 |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 31 | 5 |
| | மொத்தம் | 69 | 60 | 09 |

### (ஆ) உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்

மீளாய்வாண்டின் இறுதி வரை திறன் துறைசார் அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், முகாமைத்துவ மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 20 பதவிகளில் 05 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) | தொழில்சார் விகாட்டி நிபுணர் | 01 | 01 |
| (ii) | கணக்காளர் | 02 | 01 |
| (iii) | கொள்வனவு உத்தியோகத்தர் | 02 | 01 |
| (iv) | சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 | 01 |
| (v) | மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 01 |

## 4. தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பராமரிக்காமை

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2014 ஆம் ஆண்டின் பினன்ர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்தது. |
| கணனி, உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை |

**4.2 பாதீட்டு முரண்**

--------------------------

10 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதம் முதல் 44 சதவீதம் வரை வீச்சிலான அளவைக் கொண்டிருந்தன.

**4.3 பொது வைப்புக் கணக்கு**

-------------------------------------------

2 வருடங்களை விஞ்சிய ரூபா 1,141,615 தொகையான 25 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,724,570 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 1 ஆண்டு முதல் 18 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமாக காணப்பட்டன.

**4.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---------------------------------------------------------------------

**4.5.1 உள்ளகக் கணக்காய்வு**

------------------------------------------

உள்ளகக் கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பற்றாக்குறைகள் சீராக்குதல் தொடர்பாக திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அம்பாறை தொழில்நுட்ப கல்லூரியின் 2012 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 647,911 ஆன பொருள் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும், உரிய களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து அந்நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எம்பிலிபிட்டிய, ஹசலக, அம்பாறை மற்றும் சம்மாந்துறை தொழில்நுட்ப /கைத்தொழில் கல்லூரிகளில் வெளிவாரி மதியுரையாளர்களை ஆட்சேர்க்கும் போது தகைமைகளை உறுதிப்படுத்தி சான்றிதழ்களை உள்ளவாறான பிரதியென உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக அரச

சேவையின் உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள தலைவர்களினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) விடுமுறை பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை, விடுமுறை விண்ணப்பங்களில் குறைபாடுகள் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகள் அறவிடப்படாமை.

(ஈ) தெஹிஅத்தகண்டி தொழில்நுட்ப கல்லூரியின் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட வெளிவாரி மதியுரைப் படித் தொகையான ரூபா 3,653,380 தொகை குறித்த உத்தியோகத்தர்களின் பெயர்களுக்கு காசோலைகள் எழுத்தப்படாமல், அதிபரின் உத்தியோகபூர்வ பதவிப் பெயருக்கு காசோலைகள் எழுதி காசாக்கப்பட்டு குறித்த உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக பொருட்கள் சேவைகள் கொள்வனவு செய்வதற்கும் எரிபொருளுக்கும் அதிபரின் பெயருக்கு காசோலை வழங்கப்பட்டிருந்தது.

(உ) அம்பாறை தொழில்நுட்ப கல்லூரியின் தொழில்சார் வழிகாட்டிப் பிரிவு 2014 ஆம் ஆண்டிற்குரிய திட்டமிடப்பட்ட 27 நிகழ்ச்சித்திட்டங்களில் 09 ஐ மாத்திரம் நடாத்தியிருந்தது.

(ஊ) தெஹிஅத்தகண்டி தொழில்நுட்ப கல்லூரியின் வாகனமொன்றின் மைலோ மீற்றர் ஒரேதடவையில் 203,691 கி.மீ மாற்றப்பட்டிருந்தது. ஓட்டப் பதிவேடுகளின் மூலப் பிரதி மற்றும் இணைப்பிரதிகளில் வேறுபாடுகள் காணப்பட்டன.

### 4.5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்காக அமைச்சில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 5 தீர்மானங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

திணைக்களத்தின் பின்வரும் சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டன.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி | காலப்பகுப்பாய்வு |
|---|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 01 | குறைப் பயன்பாட்டுடன் | 4 வருடங்களுக்கு மேல் |
| (ii) | உத்தியோகபூர்வ இல்லங்கள் | 01 | குறைப் பயன்பாட்டுடன் | 4 வருடங்களுக்கு மேல் |
| (iii) | கணனிகள் | 31 | விளைவற்று | 1 வருடத்திற்கு மேல் 4 வருடங்களுக்கு குறைவு |
| (iv) | ஏனைய சொத்துக்கள் | 64 | குறைப் பயன்பாட்டுடன் | 4 வருடங்களுக்கு மேல் |

**(ஆ) வருடாந்த பொருள்மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் சில பொருட்கள் பொருளிருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதனால் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சரியானதன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம் 12 கல்லூரிகளின் தகவல்கள் அதில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 9 கல்லூரிகளில் அச்செயற்பாடுகள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித் தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **சொத்து வகை** | **சொத்துக்களின் எண்ணிக்கை/அலகுகளின் எண்ணிக்கை/அளவு** | **சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனம்** | **பெறுமதி** | **காலப்பகுதி** |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | |
| (i) | காணி | 30 ஏக்கர் | பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவனம் | 25,000,000 | தகவல்கள் தரப்படவில்லை. |
| | | 110 பேர்ச் | விளையாட்டு அமைச்சு | | - மேற்படி - |
| | | 07 ஏக்கர் | ஊவா வெல்லஸ்ஸ விளையாட்டு மைதானம் | | - மேற்படி - |
| | | 08 ஏக்கர் | இளைஞர் படையணி பயிற்சி நிலையம் | | - மேற்படி - |
| | | 1.5 ஏக்கர் | திறந்த பல்கலைக்கழகம் | தரப்படவில்லை | - மேற்படி - |
| | | 9.5 பேர்ச் | திருமதி. ஜீ.ஜீ. பிரேமாவதி | | - மேற்படி - |
| | | 01 ஏக்கர் | தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபை | | - மேற்படி - |
| (ii) | கட்டிடங்கள் | 02 | இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனம் | 1,155,000 | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) ஏனைய சொத்துக்கள் மனித வளங்கள் | 01 | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | - மேற்படி - |

**4.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | |
| 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் மற்றும் தொழில் கல்வி அதிகாரச்சட்டம் | அனைத்து மூன்றாம் மற்றும் தொழில் கல்வி பயிற்சி நிறுவனங்கள், மூன்றாம் மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 15 தொழில்நுட்ப கல்லூரிகளின் பதிவின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், பதிவு புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| நிதிப்பிரமாணம் 104(4) | திணைக்களத்தின் வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் நட்டங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| **(இ) இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் சுற்றறிக்கை** | |
| திகதியற்ற 01/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | மருதானை தொழில்நுட்பக் கல்லூரியின் கல்விசார் பதவியணியினருக்குரிய உத்தியோகத்தர்கள் வாரத்திற்கு 25 மணித்தியாலம் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டிய போதிலும், 21 விரிவுரையாளர்கள் குறிப்பிட்ட விரிவுரை மணித்தியால அளவில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கவில்லை. |

## 4.8 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மாத்தறை, கேகாலை, மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டிடங்களை புனரமைத்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 03 ஆம் திகதிய பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மேற்குறித்த புனரமைப்பிற்காக வழங்கப்பட்டிருந்த ஆலோசணைகளின் 13 குறைபாடுகள் இனங்காணப்பட்டிருந்தன. 2015 பெப்ரவரி 19 ஆந் திகதிய பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மதியுரை சேவை வழங்கப்பட்டிருந்த ஆலோசணைகளினால் நட்டம் ஏறபட்டிருந்தமையால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட அச்சேவை 2015 பெப்ரவரி 04 ஆந் திகதி முதல் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இச்சேவைக்காக திணைக்களத்தினால் ரூபா 2,012,875 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறித்த புனரமப்பிற்காக ரூபா 149 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் 101 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்த்த செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 32 சதவீதமான அளவிலான செயன் முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை.

## 4.9 செயலாற்றல்

2014 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு.

கல்வி பிரிவிடமிருந்து பெற்றுக்கொண்ட புள்ளிவிபர பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பகுதி நேர/ மாலை நேர பாடநெறிகளைப் பின்பற்றும் மாணவர்களிடமிருந்து ரூபா 10,406,500 தொகை பாடநெறிக் கட்டணங்களாக அறவிடப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் தொழில்நுட்ப /கைத்தொழில் கல்லூரிகளில் இருந்து அனுப்பப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 9,418,100 ஆன பாடநெறிக் கட்டணங்கள் அளவு மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 988,400 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 4.10 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 150 கணனிகள் மற்றும் 150 யூபீஎஸ் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 69,216 தொகை செலவு செய்து பத்திரிகை விளம்பரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 03 ஆந் திகதி வரையிலும் 17 நிறுவனங்களுக்கு விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 12 நிறுவனங்கள் மாத்திரம் கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருந்தன. கணக்காய்வு பரிசோதனைத் திதியான 2014 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரையிலும் அக்கூறுவிலைகள் திறக்கப்பட்டிருக்கவில்லை. 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி விடய எழுதுனரின் குறிப்பின் பிரகாரம் கூறுவிலைகளைத் திறத்தல் அமைச்சின் வாய்மொழி அறிவுறுத்தல் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அறிவித்தல் மூலம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வாகனமொன்று 2011 மார்ச் 18 ஆந் திகதி என்ஜின் செயலற்றுப் போனதால் 2011 யூன் 05 ஆந் திகதி பெலிஅத்த தொழில்நுட்ப கல்லூரியில் நிறுத்தி வைத்திருந்த போது பின்பக்க கண்ணாடி உடைந்தமை ஆகிய இரண்டும் தொடர்பாக ரூபா 1,973,825 தொகை செலவு செய்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது, அந்நட்டங்களை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத் தலைவரின் அனுமதியொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் மோட்டார் கோச் வகையிலான வாகனம் பணிப்பாளரால் ஓட்டும் போது விபத்திற்கட்டிருந்தமையால் ரூபா 307,405 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாகனமொன்றின் என்ஜின் செயலற்றுப் போனமை தொடர்பான இறுதி முடிவிற்கு வருவதற்கு பழுது ஏற்பட்டு 2 ½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்மானம் ஒன்றிற்கு வருவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(உ) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தின் தொழில்நுட்பக் கல்லூரியின் செயற்பாட்டுக் கைநூல் 7.13(I) இன் பிரகாரம் சகல பாடநெறிகளும் தராதரப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் 21 தேசிய தொழில் தகைமை பாடநெறிகளில் 05 பாடநெறிகள் அல்லது 24 சதவீதம் அளவு மாத்திரம் தராதரப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பொறியியல் திட்டமிடல் கலை தொடர்பான தேசிய சான்றுப்பத்திர பாடநெறி நடாத்தப்பட்டு வருகின்ற போதிலும், அப்பாடநெறி தராதரப்படுத்தப்படாத தொழில்நுட்ப /கைத்தொழில் கல்லூரிகளில் 2013 ஆம் கல்வி ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சையில் முதல் தடவையில் 392 மாணவர்களும் இரண்டாம், மூன்றாம் தடவைகளில் 188 மாணவர்களுமாக மொத்தம் 580 மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர். அதில் அப்பாடநெறி தராதரப்படுத்தப்படாத 12 தொழில்நுட்ப கல்லூரிகளில் 254 மாணவர்கள் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் வழங்கப்படும் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தைத் தவறவிட்டிருந்தனர். இதற்கமைய ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழை தவறவிட்ட மாணவர்களின் தொகை சித்தியெய்திய மாணவர் தொகையின் 44 சதவீதமளவு உயர்வாகக் காணப்பட்டது. ஒரே பாடநெறியைப் பயின்ற மாணவர்களில் தராதரப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் தேசிய தொழிற் தகைமைகளுடனான ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் போது தராதரப்படுத்தப்படாத தொழில்நுட்ப கல்லூரிகளில் அதே பாடநெறியைப் பயிலும் மாணவர்களுக்கு திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் சான்றிதழை வழங்குவதன் மூலம் அம்மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது.

## 4.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1,313 | 5333 | 780 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 144 | 18 | 126 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,272 | 842 | 430 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 1,167 | 919 | 248 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 10 | - | 10 |
| | மொத்தம் | 3,896 | 2,322 | 1,584 | 10 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 ஆம் ஆண்டின் போது கட்டிட மதியுரையாளராக நியமனம் வழங்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரின் நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்குரிய தகைமைகள் உரியவாறு உறுதிப்படுத்தாமல் பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை தொடர்பான சட்ட விதிக்கோவையின் நியதிகளுக்கு முரணாக கல்விசார் பதவியணியினரின் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு 1989 மே 26 ஆந் திகதிய 560 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை தொடர்பான சட்ட விதிக்கோவையின் பிரகாரம் மதியுரை பதவிகளுகக்ாக விண்ணப்பிக்கும் போது ஐந்து ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் இருக்க வேண்டிய போதிலும், இரண்டு உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவையின் பிரகாரம் எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தினால் இந்த உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட தகைமைகளை பரீட்சித்து ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய அனைத்து சான்றிதழ்களும் பிரத்தியேக கோவையில் உள்ளடக்கப்படாமையால் இதற்காக நிச்சயமான பதிலொன்றை வழங்க முடியாதென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

5.1German Tech

## 6. இளைஞர் நலன்புரி நிதியம்

---

### 6.1 அறிமுகம்

---

1990 மே 15 ஆம் திகதிய 610/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 1990 இன் 01 ஆம் இலக்க அவசர சந்தர்ப்பங்கள் (ஆதன அரசுடமையாக்கும்) கட்டளையின் மூலம் அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட சகல நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத ஆதனங்கள், இளைஞர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தும் நோக்குடன் 1993 மே 24 ஆம் திகதிய 768/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி பொது மக்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் (40 ஆவது அத்தியாயம்) 5 ஆம் பிரிவின் கீழ் 1993 மே 21 ஆம் திகதி சனாதிபதி அவர்களால் விதிக்கப்பட்ட 1993 இன் 01 ஆம் இலக்க இளைஞர் நலன்புரி நிதியக் கட்டளையின் கீழ் இளைஞர் நலன்புரி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இதன் படி, 1993 யூன் 29 ஆம் திகதி முதல் அந் நிதியம் இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரின் நோக்கெல்லைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், 1994 ஆகஸ்ட் மாதத்தின் போது அது வரையில் செயற்பட்ட பொது மக்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டம் வலுவிழந்ததுடன் அவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 1990 இன் 01 ஆம் இலக்க அவசர சந்தர்ப்பங்கள் (ஆதன அரசுடமையாக்கல்) பிரமாணங்கள் மற்றும் 1993 இன் 01 ஆம் இலக்க இளைஞர் நலன்புரி நிதியப் பிரமாணம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 4.2 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

(அ) பொது மக்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டம் 1994 ஆகஸ்ட் மாதத்தின் போது வலுவிழந்ததனால் நிதியத்திற்குரிய கலைத்தல் கணக்குகள் மீளாய்வாண்டு முடியும் வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் அசையும் ஆதனங்களின் உரித்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு கையளிப்பதற்கு சட்டரீதியான தடைகள் இல்லையென 1999 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சட்டமா அதிபருருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு முடியும் வரையிலும் அந்த ஆதனங்களின் உரித்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு முறையான பிரகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதியத்திற்குச் சொந்தமான தங்க ஆபரணங்கள் மற்றும் பண வைப்புக்களை தீர்த்து வைக்காமை தொடர்பாக 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வு

அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு முடியும் வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. தேசிய இளைஞர் வெற்றி அதிகாரசபை**

-----------------------------------------------------------------------

-

**5.1 ஸ்தாபிப்பு**

----------------

1979 இன் 11 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் 1979 யூலை 25 ஆம் திகதிய மற்றும் 1980 செப்தெம்பர் 24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி தேசிய இளைஞர் வெற்றி அதிகாரசபையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் படி, பிரித்தானிய எடின்பரோ கோமஹனால் 1956 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட எடின்பரோ கோமஹன் பரிசளிப்பு தீர்மானத்தைப் பின்பற்றி 1980 ஆம் ஆண்டின் போது இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்ததாக இவ் அதிகாரசபை 2014 பெப்ரவரி 25 ஆந் திகதய 14/0299/539/005 ஆம் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தேசிய இளைஞர் வெற்றி அதிகாரசபை, தேசிய இளைஞர் வெற்றி பிரிவொன்றாக தேசிய இளைஞர் மன்றத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது.